<u>நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம்</u>

<u>திண்டுக்கல்.</u>

முன்னிலை : திரு.எஸ்.பாக்கியராஜ், பி.எஸ்.ஸி., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1,

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17 –ம் நாள் செவ்வாய்க்கிழமை

CC. No.476/2019

TNDG03–003863–2019

கு.வி.மு.ச. பிரிவு 255–ன் கீழ் தீர்ப்புரை

| | | |
|---|---|---|
| **1.** | **வழக்கின் வரிசை எண்** | **சு.மு.வி.வ.எண்.476/2019** |
| **2.** | **குற்றம் நடந்த தேதி** | **22.04.2019** தேதியிட்ட கேட்பறிவிப்பு கிடைக்கப் பெற்றதிலிருந்து 15 நாட்கள் கழித்து, 16 வது நாள் |
| **3.** | **புகார்தாரரின் பெயர் மற்றும் முகவரி** | திரு.S. வீரராஜன் (50/2019)<br>த/பெ. சுப்புராயன்,<br>கதவு எண் 5/15,<br>குருசாமி பிள்ளை தெரு, பழனி ரோடு,<br>திண்டுக்கல் |
| **4.** | **எதிரியின் பெயர் மற்றும் முகவரி** | திரு. R. சிவகுமார் (40/2019)<br>த/பெ. லேட். ராமசாமி ராஜா,<br>T.ராமராஜபுரம்<br>திம்மணநல்லூர் கிராமம்,<br>வேம்பார்பட்டி போஸ்ட்,<br>திண்டுக்கல் தாலுகா. |
| **5.** | **குற்றச்சாட்டின் விவரம்** | எதிரி, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக |
| **6.** | **எதிரியின் வாதுரை** | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை |
| **7.** | <u>**தீர்ப்பின் முடிவு**</u> – எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என முடிவு செய்யப்படுகிறது. | |
| **8.** | **தீர்ப்பு பகரப்பட்ட தேதி** | 17.03.2026 |
| **9.** | **தீர்வுக்கான காரணங்கள் சுருக்கமான உரை –**<br>**முடிவாக,** வழக்கு காசோலைகள் முழுமையான அல்லது பகுதி கடன் அல்லது பிற கடன் அல்லது கடப்பாட்டினை தீர்ப்பதற்காக எதிரியிடமிருந்து புகார்தாரர் பெற்றுள்ளதாக நீதிமன்றம் அனுமானம் | |

| | |
|---|---|
| | **(Presumed) செய்துள்ளதை, சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலையில் ஒரு நிகழ்தற்தக்க எதிர்வழக்கை (Preponderance of Probabilities) முன்னிறுத்தி எதிரி தரப்பில் முறியடிக்கவில்லை (not rebutted the legal presumption) என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.** |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | CASE SUMMARY | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | | **Release on** |
| | | | திரு. R. சிவகுமார் (40/2019)<br>த/பெ. லேட். ராமசாமி ராஜா,<br>T.ராமராஜபுரம்<br>திம்மணநல்லூர் கிராமம்,<br>வேம்பார்பட்டி போஸ்ட்,<br>திண்டுக்கல் தாலுகா. | – | | _ |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | | |
| | | | **07.06.2019** | **-** | | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | Not applicable | | | |
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | | | | |
| (v) | **Filing of all miscellaneous petitions and their results including the** | : | **Crl.M.P.No.** | **Date of Filing** | | **Result** |
| | | | **94 BNSS Petition filed in M.P.No.7/2025** | **07.10.2025** | | **Dismissed on** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | | **94 BNSS Petition filed in M.P.No. 10/2025** | | **10.11.2025** | **24.10.2025**<br><br>**Dismissed on 01.12.2025** |
| (vi) | **Date of examination in-chief and cross-examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW1 | வீரராஜன் | 22.09.2023 | 02.02.24 |
| (vii) | **Date of examination of the accused U/Sec 313 of the Code** | : | **09.06.2025** | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/producti onas the case may be; and** | : | Nil | | | |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | : | **Sessions Court CMP Numbers** | | **High Court No and Date of Stay** | **Result** |
| | | | - | | - | - |

இத்தனி நபர் புகார் 07.06.2019 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 10.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தது. புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.G. ராஜாமணி** அவர்கள் ஆஜராகி வாதுரைத்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.நா.ரமேஷ்குமார்** அவர்கள் ஆஜராகி உள்ளார். இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான

இவ்வழக்கில் வழக்காவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்ப்புரை**

1. **இவ்வழக்கின் எதிரி** மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881-ன் பிரிவு 138-ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் எனவும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கி, புகார்தாரருக்கு உரிய இழப்பீடு வேண்டியும் புகார்தாரரால் புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **புகார்தாரர் வழக்கின் சுருக்கம் :**

**திரு.வீரராஜன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார்.** புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **06.02.2019 தேதியிட்ட காசோலை எண். 000167 தொகை ரூ.2,00,000/- க்கு " ICICI வங்கி, கணவாய்பட்டி "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான **"கனரா வங்கி திண்டுக்கல் நேருஜி நகர்"** கிளையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது **" Funds insufficient"** என்ற காரணம் குறிப்பிட்டு **30.03.2019** தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **22.04.2019** அன்று அனுப்பியுள்ளார். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை **24.04.2019** ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை. எனவே எதிரி காசோலை மோசடி குற்றம் புரிந்துள்ளதாகவும், எதிரி மீது மாற்றுமுறை

ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் படி நடவடிக்கை எடுத்து இழப்பீடு பெற்றுத்தரக் கோரி புகார்தாரரால் இப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இவ்வழக்கில்** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு எதிரான குற்றசாட்டின் சாராம்சத்தினை கு.வி.மு.ச.பிரிவு 251ன்படி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே வழக்கு புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு என வகை செய்யப்பட்டது.

4. **புகார்தாரர் தரப்பு சாட்சிய விவரம் :**

எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு, புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் **திரு. வீரராஜன்** என்பவர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் **பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 06.02.2019ம் தேதியிட்ட முறையீடுதாரருக்கு எதிரி கொடுத்த திண்டுக்கல் கணவாய்பட்டி ICICI வங்கி காசோலை (காசோலை எண். 000167) | .. பு.சா.ஆ.1 .. ஆகவும் |
| 2. | 30.03.2019ம் தேதியிட்ட காசோலையை புகார்தாரர் திண்டுக்கல் நேருஜி நகர் வங்கியில் செலுத்தியதற்கான வங்கி சலான் | .. பு.சா.ஆ.2 .. ஆகவும் |
| 3. | 02.04.2019ம் தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ | .. பு.சா.ஆ.3 .. ஆகவும் |
| 4. | 22.04.2019ம் தேதியிட்ட முறையீடுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | .. பு.சா.ஆ.4 .. ஆகவும் |

| | | |
|---|---|---|
| 5. | 22.04.2019 ம் தேதி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பிய பதிவு தபால் ரசீது | .. பு.சா.ஆ.5 .. ஆகவும் |
| 6. | 24.04.2019 ம் தேதிய பதிவுத் தபால் டெலிவரி புரூப் | .. பு.சா.ஆ.6 .. ஆகவும் |

குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. புகார்தாரர் தரப்பு** சாட்சியம் முடிக்கப்பட்டவுடன், புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாகத் தோன்றுகிற சாட்சிய விவரங்களை எதிரிக்கு எடுத்துக்கூறி, அது குறித்து எதிரி நேர்முகமாக விளக்குவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) –ன் படி எதிரியிடம் வினவியபோது புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் பொய்சாட்சியம், என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு போதிய கால அவகாசம் கொடுத்தும் எதிரி தரப்பில் யாரும் ஆஜராகாத நிலையில் புகார்தாரர் தரப்பில் எதிரி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இருத்தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) எதிரி மீதான மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138 ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்தின் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) எதிரி ஒரு நிகழ்தற்தக்க எதிர் வழக்கை முன்னிறுத்தி அதை நிலைநாட்டி சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து தன் மீதான நிரூபிக்கும் சுமையை விடுவித்துக் கொண்டனரா? என்பதுவேயாகும்.

7. **புகாரர்தாரர் தரப்பில்** எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் திரு. வீரராஜன் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரர் பு.சா.1 திரு, வீரராஜன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **06.02.2019 தேதியிட்ட காசோலை எண். 000167 தொகை ரூ.2,00,000/- க்கு " ICICI வங்கி, கணவாய்பட்டி "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான **"கனரா வங்கி திண்டுக்கல் நேருஜி நகர்"** கிளையில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி காசோலையானது " **Funds insufficient"** என்ற காரணம் குறிப்பிட்டு **30.03.2019** தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது என்றும், இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **22.04.2019** அன்று அனுப்பியுள்ளார் என்றும், எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை **24.04.2019** ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்றும், மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், வழக்கு மூலமானது உரிய கால அவகாசத்திற்குள் ஏற்பட்டு இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளதாக காணமுடிகிறது என்றும், எனவே மாற்றுமுறையாவணச் சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக அமைந்துள்ளது.

**8. எதிரி** மாறான நிரூபணத்தின் மூலம் புகார்தாரரின் வழக்கை உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம் முறியடித்துள்ளனரா? என்று பார்க்கையில், எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவுகள் 251 மற்றும் 313 ன் கீழான விசாரணையின் போது **"பொய்வழக்கு புகார்தாரரை யார் என்று தெரியாது "** என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பதில் அறிவிப்பில், புகார்தாரரை யார் என்றே தெரியாது எனவும், புகார்தாரரிடமிருந்து பணம் எதுவும் பெறவில்லை எனவும், அதற்கு ஆதரவாக காசோலை மற்றும் கடனுறுதிச்சீட்டு எதுவும் கொடுக்கவில்லை எனவும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் காசோலை மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் குறித்து மறுக்கப்படவில்லை. எதிரி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்கு பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**9. பு.சா.1 ன்** குறுக்கு விசாரணையில் " நான் ரெடிமேட் துணிகள் கைலி., ஜட்டி, பனியன் விற்கும் வியாபாரம் செய்து வருகிறேன். வியாபாரம் செய்வதற்கு எந்த உரிமமும் தாங்கள் பெறவில்லை என்றால் சரிதான். 2014 லிருந்து கொரோனா காலம் வரை நான் வியாபாரம் செய்திருந்தேன். மொத்த துணிகள் எங்கிருந்து பெறுவீர்கள் என்றால் ஈரோடு மற்றும் திருப்பூரிலிருந்து பெறுவேன் அதற்குரிய ரசீதுகள் எதற்கும் வைத்துள்ளீர்களா என்றால் நான் திங்கட்கிழமை சந்தையில் சென்று

வாங்குவதால் ரசீதுகள் எதுவும் இல்லை தாங்கள் எந்தக் காலத்திலும் ரெடிமேட் துணிகள் விற்கவில்லை என்றால் சரியல்ல. தாங்கள் எந்தெந்த வங்கியில் கணக்குகள் உள்ளது என்றால் கனரா வங்கி மற்றும் ஸ்டேட் பேங்க் வங்கியில் கணக்குள் உள்ளது 06.08.2018 ல் எனது 2 வங்கிகளிலும் எவ்வளவு தொகை இருக்கும் என்றால் அதிகபட்சமாக 50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் தொகை இருக்கும். 06.08.2018 ம் தேதிக்கு முன்பு 2 வங்கிகளிலிருந்து எதிரிக்கு, பணம் எதுவும் எடுத்துக் கொடுத்தீர்களா என்றால் இல்லை. கையில் இருந்துதான் கொடுத்தேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், வியாபாரத்திற்கு செல்லும் போது பழக்கம். 06.08.2018 க்கு முன்பு எவ்வளவு காலம் எதிரி பழக்கம் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு பழக்கம். ராமராஜபுரத்தில் எதிரியை தவிர யாரையும் தெரியாது என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் கிளர்க்காக உள்ளார் வியாபாரம் செய்யும்போது கடனுக்கு துணிகள் கொடுக்கமாட்டேன் என்றால் சரிதான் கடனுக்கு கொடுத்ததாக சொல்லும் தொகை எவ்வளவு என்றால் 1 1/2 வட்டி ஆகும் எதிரிக்கு கொடுத்த கடன் தொகை ரூ.2 லட்சத்திற்க்கு மாத வட்டி ரூ. 3000 ஆகும். எதிரி எந்த மாதமும் வட்டி தரவில்லை. நான் 12 ம் வகு ப்பு வரை படித்துள்ளேன். தங்களுடைய அறிவுறுத்தலின் பேரில்தான் அறிவிப்பு புகார் நிரூபண வாக்குமூலம் போடப்பட்டது என்றால் சரிதான் 1 1/2 வட்டிக்கு கொடுத்தேன். பணத்தை திருப்பி தருவதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வியாபாரத்திற்கு செல்லும் இடத்தில் வேறு யாருக்கும் கடனுக்கு பணம் கொடுக்கவில்லை. குருசாமி பிள்ளை சந்தில் சொந்த வீட்டில்

குடியிருக்கிறேன் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது உடன் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை 06.08.2018 ம் தேதி திண்டுக்கலில் உள்ள எனது வீடான குருசாமி பிள்ளை சந்தில் வைத்து நண்பகல் 12:00 மணிக்கு பணம் கொடுத்தேன் அன்றைய தினமே எதிரி காசோலையை கொடுத்தார். 06.08.2018 ம் தேதி என்ன கிழமை என்றால், ஞாபகமில்லை. 06.08.2018 ம் தேதி ராமராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை பணியில் இருந்த நிலையில் நண்பகல் 12.00 மணிக்கு வழக்கு காசோலை தொகை வரவுமில்லை. கொடுக்கவுமில்லை என்றால் சரியல்ல. 06.02.2019 ம் தேதிக்கு எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டீர்களா என்றால் கேட்டபொழுது ஒரு வாரம் முன்ன பின்ன தருகிறேன் என்று சொன்னார். காசோலையை நிரப்பியது யார் என்றால் அவரே நிரப்பி கொண்டு வந்தார். காசோலையில் கையெழுத்து வேறு மையினாலும், மற்ற விபரங்கள் வேறு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் கோபால்பட்டியை சேர்ந்த சிவகுருநாதன் என்ற கணேசனை தெரியுமா என்றால் எனக்கு சொந்தம். தெரியும். சிவகுருநாதன் என்ற கணேசன் எதிரி மீது உரிமையியல் வழக்கு போட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். சிவகுருநாதன் என்ற கணேசனுக்கும். எதிரிக்கும்தான் வரவு செலவு, என்னை யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. சிவகுருநாதன் வசம் உள்ள காசோலையை பொய்யாக நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2018 காலகட்டத்தில் பொருளாதார ரீதியாக எனக்கு தகுதி உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2018 காலகட்டத்தில் ரூ.2 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு எந்தவித அடிப்படை பொருளாதார தகுதி இல்லை என்றால் சரியல்ல. சிவகுருநாதன் என்ற கணேசனின் கருவியாக இருந்து எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படியாக கொடுக்க வேண்டிய கடன் தொகை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று. எதிரிக்கும். இவ்வழக்கு காசோலைக்கும் சம்பந்தம் இல்லை. என்றால் சரியல்ல. " என குறிப்பிடபட்டுள்ளது.

11. **மேற்கண்ட** சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், எதிரி தரப்பில் பணம் பெற்றதாக சொல்லப்படும் 06.08.2018 அன்று எதிரி பணியில் இருந்ததாகவும் அன்றைய தினம் பணம் எதுவும் புகார்தாரரிடம் இருந்து பெறவில்லை எனவும், காசோலையை கணேசன் என்பவரிடம் கொடுக்கப்பட்டது எனவும் அதை புகார்தாரர் தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவும் முன்நிறுத்தப்பட்டு புகார்தாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வாதத்தினை ஒத்துரைத்து உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியங்கள் சாண்றாவணங்கள் முன் நிறுத்தப்படவில்லை. மேலும் பு.சா.1ன் குறுக்கு விசாரணையிலும் மாறான சங்கதிகள் எதும் வெளிக்கொண்டுவரப்படவில்லை. எதிரி தரப்பில், முன்நிறுத்தப்பட்ட எதிர்வாதங்களை எதிரி உரிய சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் மாறான நிரூபணங்களின் மூலம் முன்னிறுத்தி நிரூபணம் செய்யவில்லை. மேலும் இவ்வழக்கின் சட்ட அனுமானத்தினை முறியடிக்க தவறியுள்ளனர் என்பதை காணமுடிகிறது. புகார்தாரரால் எதிரிக்கு எதிரான

குற்றச்சாட்டுகள் மாற்றுமுறையாவணச் சட்ட அனுமானத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. **எனவே எதிரி மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி தீர்மானிக்கிறது.**

**12. முடிவாக,** எதிரி மாற்றுமுறையாவணச் சட்டம் 1881 ன் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து **எதிரிக்கு ஆறு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** மேலும் எதிரி, புகார்தாரருக்கு தொகை **ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)– ஐ** இழப்பீடாக செலுத்த வேண்டும் என்றும் கு.வி.மு.ச.பிரிவு 357 உடன் இணைந்த மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீடு தொகையை உத்தரவு தேதி முதல் 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் மேலும் **2 மாத மெய்க்காவல் சிறைத் தண்டனையை** எதிரி அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு **2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் நாள்** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.17 16:29:58 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
திண்டுக்கல்.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>1. புகார்தாரர் தரப்பு சாட்சி</u>**

1. பு.சா.1 – திரு. வீரராஜன்

**<u>2. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| பு.சா.ஆ.1 | 06.02.2019 ம் தேதியிட்ட முறையீடுதாரருக்கு எதிரி கொடுத்த திண்டுக்கல் கணவாய்பட்டி ICICI வங்கி காசோலை (காசோலை எண். 000167) |
| பு.சா.ஆ.2 | 30.03.2019 ம் தேதியிட்ட காசோலையை புகார்தாரர் திண்டுக்கல் நேருஜி நகர் வங்கியில் செலுத்தியதற்கான வங்கி சலான் |
| பு.சா.ஆ.3 | 02.04.2019 ம் தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ |
| பு.சா.ஆ.4 | 22.04.2019 ம் தேதியிட்ட முறையீடுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| பு.சா.ஆ.5 | 22.04.2019 ம் தேதி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பிய பதிவு தபால் ரசீது |
| பு.சா.ஆ.6 | 24.04.2019 ம் தேதிய பதிவுத் தபால் டெலிவரி புரூப் |

**3. <u>எதிரி தரப்பு சாட்சி</u> – இல்லை**

**4. <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை**

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.17 16:30:05 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1**
**திண்டுக்கல்.**